1974 மார்ச் 29]

மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை

*670 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் உபகாரச் சம்பளத் தொகையை அதிகமாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவ்விதத் திட்டம் மத்திய அரசு பரிசீலனையில் உள்ளது. இவ்வரசு பரிசிலனையில் இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தற்போது கொடுக்கப்படும் உபகாரச் சம்பளத் தொகை எந்த ஆண்டு நிர்ணயிக்கப் பட்டது ? தற்போது பரிசிலனை செய்து கொண்டிருந்தது மத்திய அரசு என்று சொன்னார்கள். மாநில அரசு அதற்கு ஏதேனும் ஆலோசனை வழங்கியிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, 1960-ம் ஆண்டுதான் இந்த உபகாரச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. 1971–72-ம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டுவிட்ட பிறகு பல படிப்பு களுக்காக ரூ. 10, ரூ. 15 என்கிற அளவில் உபகாரச் சம்பளம் உயர்த்தி யிருக்கிறது. மத்திய அரசிடமும் பல முறை மேலும் உயர்த்தவேண்டு மென்று கேட்டு இருக்கிறோம். சமீபத்தில் மத்திய அமைச்சர் அவர்கள் இந்த உபகாரச் சம்பளத்தை உயர்த்தி இருப்பதாக பாராளுமன்றத்தில் கூறி இருப்பதை நான் பத்திரிகையில் பார்த்தேன். எனவே மத்திய அரசு அது பற்றி பரிசிலித்துக்கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, மத்திய அரசு எத்தனை ஆண்டுகளாகப் பரிசிலித்துக்கொண்டிருக்கிறது ? அது பரிசிலனையை முடிக்கும்போது இருக்கிற விலைவாசி எப்படி இருக்கும், அதற்குத் தகுந் தாற் போல், அந்தப் பரிசிலனை இருக்குமா அல்லது இப்போது இருக்கும் நிலையில் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசைத்தான் கேட்கவேண்டும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, புலவர் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு மத்திய அரசு உதவித் தொகை வழங்கிக் கொண்டு இருந்தது. அதை இப்போது நிறுத்தி விட்டது. தற்போது மாநில அரசு வழங்கும் அந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால் அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, பொது வாக பல உதவித் தொகைகளை உயர்த்தவேண்டுமென்று மாநில அரசு கருதுகிறது என்றாலும், நிதிநிலை இடம் தராத காரணத்தால் இப்போது உயர்த்துவதற்கு இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, உபகாரச் சம்பளம் வழங்குவதைப்பற்றி மத்திய அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசுக்கு இம்மாதிரியான எந்தெந்த முறைகளில் உபகாரச் சம்பளம் உயர்த்தவேண்டுமென்று இந்த அரசு ஏதாவது ஆலோசனை கொடுத்திருக்கிறதா ? அந்த ஆலோசனையைத்தான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நீண்ட காலமாக அளித்து வந்த உபகாரச் சம்பளம்—மத்திய அரசு 1968–69-ம் ஆண்டு எவ்வளவு தொகை கொடுத்துக்கொண்டு வந்தார்களோ, அந்தத் தொகையில் எத்தனை பேர்களுக்கு கொடுத்துக்கொண்டிருந்தார்களோ, அத்தனை பேர்களுக்கு அத்தத் தொகை கொடுக்க முடியும் என்று முடிவு எடுத்து, இதுவரையில் 1968–69-ல் எத்தனை பேர்களுக்கு எவ்வளவு தொகை கொடுத்தார்களோ அதே தொகையைத்தான்—ஆண்டு தோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறோம். பல பேர் பல நிலைகளிலிருந்து மாணவர்கள் உட்பட மத்திய அரசுக்கு உயர்த்த வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் மத்திய அரசு கவனிக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் மிர்தா அவர்கள் அது பற்றிக் கூறியிருப்பதை பத்திரிகையில் பார்த்தேன். அதைத்தான் நானும் கூறினேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, விலைவாசி ஏற்றத்தால் விடுதிக் கட்டணம் உயர்ந்து இருக்கிறது. முன்பெல்லாம் மாணவர்களுக்கு அந்தத் தொகை போதவில்லையென்றால், மாநில அரசு கொஞ்சம் உதவித் தொகை கொடுத்து அதைச் சரிக்கட்டிக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட முறையை இப்போது தொடர்ந்து செய்து வருகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மத்திய அரசு உதவித் தொகை, மாநில அரசு உதவித் தொகை என்று இரண்டு விதமான உதவித் தொகைகள் உண்டு. அதிலே மத்திய அரசு உதவித் தொகைக்கும், மாநில அரசு உதவித் தொகைக்கும் ஏற்றத் தாழ்வு இருந்தால் அந்த வித்தியாசத் தொகையை கொஞ்சம் கூடுதல் குறைவு இருக்குமானால் அதை மாநில அரசு அப்படிப்பட்ட உதவித் தொகையாக மாணவர்களுக்குக் கொடுக்கிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்

*671 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1973-ம் ஆண்டில், இலங்கையிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்திற்கு திருப்பி அனுப்பப்படவிருக்கும் இந்தியர்கள் எத்தனை பேர் ?

(இ) அதில் தமிழகத்திற்கு அனுப்பப்படும் தமிழர்கள் எத்தனை பேர் ?